**MCOP NO:1115/2024** **DATE:02.08.2025**

ம.சா :1

பெயர் : திரு. ராஜா

த/பெ : திரு. சிதம்பரம்

வயது : 52

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 16 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

30.05.2023 அன்று எனது சொந்தமான TN 45 CA 8213 இருசக்கர வாகத்தில் சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்து பொறுத்து முதன் முதலாக காவல் துறைக்கு எனது மகன் புகார் கொடுத்தார். புகார் 10 நாட்கள் கழித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். என் மீது மோதிய வாகனமானது பதிவு எண் TN 65 J 2949 என்ற இருசக்கர வாகனம் மோதியது என்று எனது மகன் புகாரில் சொல்லியுள்ளார். இந்த விபத்தினால் நான் ஓட்டிச்சென்ற எனது வாகனத்தின் முன்புறம் சேதாரம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்காக எனது காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள எனது மருத்துவ அறிக்கையில் எனக்கு காலில் ஏற்பட்ட காயத்தினால் எதிர்காலத்தில் எந்த வாகனமும் ஓட்டக்கூடாது என்று அதில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால், நான் வாகனத்தை ஓட்டும்போது மயக்கம் வருகிறது. எனக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்யவில்லை. நான் மீண்டும் எனக்கு வாகனத்தை ஓட்டும்போது தலை சுற்றல் ஏற்படுவது சம்பந்தமாக மருத்துவரிடம் சென்று சொன்னேன், அதற்கு ஸ்கேன் எடுத்து பார்த்தார்கள். நான் மளிகை கடையில் வேலை செய்து நான் மாதம் ரூ.25,000/- வருமானம் ஈட்டி வருவதாக மனுவில் சொல்லியுள்ளேன். மேற்படி மாத வருமானது வங்கி கணக்கு மூலமாக வந்துள்ளதா என்பதை காட்டுவதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் நான் மருத்துவ

சிகிச்சை எடுத்த போது எனக்கு உதவியாளராக இருந்ததற்கு மசாஆ 7-ல் சொல்லப்பட்டு தொகைகளை வங்கி கணக்கு மூலமாக கொடுத்தோமா அல்லது நேரடியாக கொடுத்தோமா என்றால் சாட்சி முதலில் attender-க்கு கொடுக்க வில்லை என்று கூறி விட்டு பின்னிட்டு நான் வீட்டில் இருந்த போது எனக்கு உதவியாளராக இரண்டு பேர்கள் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு உண்டான தொகையை எனது மனைவி கொடுத்தார் என்று கூறிகிறார். எனது மனைவியிடம் நான் சம்பாதித்த பணத்தை கொடுத்து வைப்பேன், அந்த தொகையை வைத்து கொடுத்து வந்தார். நான் சிகிச்சை பெற்றுக்கொண்ட காலகட்டத்தில் எனக்கு சம்பளம் எதுவும் வரவில்லை. என்னுடைய முதலாளி எனக்கு ரொக்கமாக பணம் கொடுத்தார். எனது மருத்துவ செலவு எவ்வளவு ஆனது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதை பொறுத்து எனது மனைவியையும், மகனையும் தான் கேட்க வேண்டும். அவர்கள் எந்த வழியில் அந்த தொகையை கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் காரில் மருத்துவ சிகிச்சைக்கு சென்ற வகையில் எனக்கு ரூ.50,000/- செலவு ஏற்பட்டது என்ற விவரத்தை எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை. என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்திற்கு பின் பகுதியில் சேதாரம் ஏற்பட்டதாக சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வாகனத்தை ஓட்டி என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்தின் பின் பகுதியில் மோதியதால் தான் எனது வண்டிக்கு முன்புறத்திலும், என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்திற்கு பின்பகுதியிலும் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதை மறைப்பதற்காக விபத்து ஏற்பட்டு 10 நாட்கள் கழித்து என் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனத்தின் மீது எனது மகனை வைத்து புகார கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

2-ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.